[1979 மார்ச் 14

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தொடர்ந்து இந்த அரசு, நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டுதானிருக்கிறது. இவற்றை மனதிலே வைத்து, பாரதப் பிரதமருக்கும் ரஷியப் பிரதமருக்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின் படி, நெல், அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிற சூழ்நிலையில் அதற்கான விலையைக் கூட்டிக் கொடுக்கிற பொறுப்பு மத்திய அரசைப் பொறுத்தது என்றாலும் இந்த அரசு இந்த சூழ்நிலையைப்பயன்படுத்தி மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, கோதுமைக்குக் கொடுப்பது போல், நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் இந்த அரசு தொடர்ந்து வாதாடி வந்துகொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முடிவு காணமுடியுமா? இல்லையென்றால், மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி, கூடுதல் விலை பெற ஒரு தீர்மானம் நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே வருகிறது, மீண்டும் அரசு வற்புறுத்துமா என்ற கேள்வியைத்தான் இறுதியிலே கேட்டார்கள். அதைத்தான் முதலிலே சொன்னேன். தொடர்ந்து மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. குறைந்தபட்சம் கோதுமைக்குக் கொடுக்கிற விலையை நெல்லுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அவையிலே தீர்மானம் போடுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே எழுப்பினார்கள். மாண்புமிகு முதல்வரோட்டு கலந்து அப்படிப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், நிச்சயமாக இந்த அரசு தீர்மானம் போடுவதற்குத் தயங்காது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பொது நூலகங்கள்.

* வினா எண் 386—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அனைத்து மாவட்டங்களிலுமுள்ள நூலகங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நூலக சீரமைப்புக் குழு அனைத்து நூலகங்களையும் அரசே தனது நேரடிப் பார்வையில் நடத்த வேண்டுமென்றும், நூலக ஆணைக் குழுக்கள் நடத்தத்

தேவையில்லை என்றும் பரிந்துரைத்திருந்தது. இதனை ஆய்ந்து அரசு கொள்கை அளவில் நூலக ஆணைக் குழுக்கள் சில மாற்றங்களுடன், நூலகப் பணியை தொடர்ந்து நடத்தலாம் என கருதுகிறது.

பொது நூலக அலுவலர்கள்.

*வினா எண் 387 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர்கள் அண்மையில் அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்காணும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி இராமநாதபுரம் மாவட்ட நூலக ஊழியர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தன:—

1. மாதந்தோறும் 1-ந் தேதி ஊதியம் வழங்க வேண்டும்,

2. குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம் ரூ.10,000 நூலகப் பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

3. ஓய்வு ஊதியம் வேண்டும்.

4. பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

5. அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்கும் வண்ணம் நூலக ஊழியர்களை அரசுப் பணியாளர்களாக விரைவில் அறிவிக்க வேண்டும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் எத்தனை நூலகங்கள் இருக்கின்றன? புதிதாக, நூலகங்களைத் துவக்க இந்த அரசு முயற்சி எடுத்துள்ளதா? நூலகங்களை, நூலக ஆணைக் குழு நடத்துவதற்கும் அரசே நடத்துவதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு அளிப்பதைப் போன்ற சலுகைகளை அளிக்க, அரசு நிதித்துறை சிறப்புத் தனி அதிகாரி திரு. சீனிவாசனைக் கொண்ட கமிட்டி போட்டது, அதனுடைய முடிவு என்ன? எனவே, நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போன்ற......